INDIAN JOURNAL OF TAMIL | Volume 2 | Issue 1

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# காரைக்காலம்மையார் - ஓர் ஆய்வு

**இரா. ஜெயலட்சுமி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி, உசிலம்பட்டி-625532, தமிழ்நாடு, இந்தியா.

# Karaikalammayar - A Study

**Ira. Jayalakshmi [a, *]**

[a] Department of Tamil, Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti-625532, Tamil Nadu, India.
*Corresponding Author Email: jeyatha78@gmail.com

(Received: 05th January 2020; Accepted: 17th Febuary 2021)
DOI: http://doi.org/10.34256/ijot2115

**Abstract:** The Nayanmars were fully dedicated to saivite doctrines and served godly. The theory of purity of the mind rather than the strength of the body is intertwined with the life of the holy woman, which causes the emergence of karaikalammayar article from time to time. In this respect, the article reviews karaikalammayar, the only female servant of the sixty-three, on the basis of the Saiva theory, in an amicable and critical perspective.

**Key Words:** Nayanmars, Karaikalammayar, Saivam, Women

## முன்னுரை

சமண, பௌத்தங்களைத் தொடர்ந்து வைதீகச் சமயங்கள் தமிழகத்தில் வேரூன்ற தொடங்கிய காலகட்டத்தில் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மக்கள் எளிதில் அணுகிட வேண்டும் என்பதற்காகவே எளிமையாக்கி கொண்டு சேர்த்தனர். சைவ வைணவ அடியார்கள் வைணவத்தில் அவதாரங்களின் தத்துவமும் சைவத்தில் பதி, பசு, பாசம் என்கிற மெய்ஞ்ஞானத்தையும் இங்கு நாம் காணவேண்டியுள்ளது. சைவத்தைப் பொறுத்தவரை கொள்கையும், கோட்பாடும் அறுத்து மூவர் தத்தமக்கு ஏற்ப வகை செய்து மக்களுக்கு ஜீவா அனுபவம் எளிதில் கிட்டும்படியாக வகை செய்தனர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அந்த அடிப்படையில் தான் பெண் அடியவரான காரைக்கால் அம்மையாரை அந்த புள்ளியில் இணைக்க இந்த கட்டுரை விளைகிறது.

பற்றிப் படர்ந்து நிற்கும் சைவத்தில் ஒரு பெண் அடியாரை மட்டுமே நம்மால் காணமுடிகிறது. ஆதலால் இவரது பாடல்களில் இறைத் தத்துவத்தை ஆய்வு நோக்கில் காண இக்கட்டுரை முயன்றிருக்கிறது.

## சைவம் வளர்த்த காரைக்கால் அம்மையார்

"ஈங்கிவன் குறித்த கொள்கை இது; இனி இவனுக்காகத்

தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங்குன்பால்

ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்

பாங்குற வேண்டும் என்று பரமர்தாள் பரவி நின்றார்"

காந்தியடிகளின் தண்டியாத்திரையும் நவகாளிக்கு மேற்கொண்ட சமூக ஒற்றுமையின் புதிய யாத்திரையும் வரலாற்றில் காணும் சான்றுகள் (Sekkizhar, 1902). இதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் காரைக்கால் அம்மையாராகவே தெரிகிறது. கால் கொண்டு நடவாமல் கைகளைப் பாதமாக்கி அதில் சிவநாமம் தாங்கி நடந்த அம்மையாரின் பக்தி சைவத்தில் தோன்றிய யுகப்புரட்சியாகவே நான் காண்கிறேன்.

அந்தணர், அந்தணர் அல்லாதோர் என பேதம் பாரா இறைவன், அவன் வாயார 'அன்னையே' என அழைக்கும் பேற்றை புனிதவதியாரைத் தவிர வேறு எவரும் பெற்றிலர்.

## அறவாழ்வில் இறைபக்தி

ஈசனையும் உமையவளையும் நாவுக்கரசன் ஆண்டான் அடிமை எனும் நிலைப்பாட்டில் அணுகினார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்

……………………………….……..

மூசுவண்டறையும் பொய்கையும் போன்றே - ஈசன்

எந்தன் இணையடி நிழலே"

அவ்வண்ணமே இல்லற வாழ்வை இனிதென நடத்திய புனிதவதி அதனை இறைவாழ்வாக வாழ்ந்தார். அந்த இறைவாழ்வு சிவ வாழ்வாகிறது. அந்த சிவ வாழ்விற்கு தவ வாழ்க்கையை அர்ப்பணித்தார் (Mayilvahanan, 2003).

இந்நிலையில் தன் வாழ்நாளை சிவனுக்காக அர்ப்பணிக்க எண்ணிய நிலையில் தான் பரமதத்தனும் அதனை புரிந்து கொள்கிறார்.

தன் கணவனின் பிரிவைத் தொடர்ந்து ஈசனையே தன் மகனாக உள்ளத்தில் இறுத்தி தவ வாழ்வ மேற்கொண்டார். பரமனைக் காண தான் வாழ்வை முடிநிலை வரைக் கொண்டு சென்று பரமனின் அருள் பெற்றதால் தான் புனிதவதி.

"ஆங்கவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற

பூங்குழலார் அவாதாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்

ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப் பெருக

பாங்கில்வரும் மனைஅறத்தின் பண்புவழா மையில் பயில்வார்

இதன்வழி இல்லறத்தில் இறைவாழ்வைக் கண்ட அம்மையாரின் பக்தியினைக் காணமுடிகிறது.

## புனிதவதியும் புதுமைகளும்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராமகிருஷ்ணப் பரமஹம்சரும் அவரது சீடர் விவேகானந்தரும் புனிதர்கள் எனக் கருதப்பட்டனர். காரணம் சமயத்திற்கு அவர்கள் செய்த புத்தாக்கப் பணிகளேயாகும். அதே வேளையில் பெண் துறவி நிவேதிதாவும் இருந்தார் என்பதை நினைவில் கொள்ளும் போது, நிவேதிதாவை தனது உள்ளத்தில் நிறுத்தியவர் பாரதி என்பதும் நமது நினைவுக்கு வரும் புதுமையையும், புரட்சியையும் பேசிய பாரதி தனது கவித்துவத்தின் உணர்ச்சிப் பெருக்கைக் குறைத்து ஆன்மீகக் கவிகளை ஆழ சிந்தித்து எழுதியதற்கு நிவேதிதாவின் சந்திப்புதான் காரணம். இதனை புனிதவதியாம் காரைக்காலம்மையாரோடு ஒப்பிடுகிறேன்.

ஞான சம்பந்தனுக்கு உமையவள் ஞானபால் ஊட்டியிருக்கலாம். சுந்தரருக்கு தூது சென்றிருக்கலாம். ஒரு பெண்ணை உலகறியச் செய்வதற்கு ஈசனின் பிரம்ம பிரயத்தனத்தை வியந்து பார்க்கிறேன்.

இல்வாழ்வில் காரைக்காலம்மையார் ஒரு புனிதவதி இறைவாழ்வில் அவரே ஒரு புதுமைவாதி. கணவன் பாற் கொண்ட பாசப்பெருக்கு, அங்கு தொடங்கியது. புதுமையின் ஆரம்பம், மாங்கனிக் கொண்டு கணவனை அதிசயிக்க வைத்த அம்மையார். கணவனின் முடிவால் இவர் அதிசயத்துப் போகும் அளவுக்கு வாழ்க்கையில் மாற்றம் வந்தது. இதுதான் பக்தியில் அவர் கண்ட முதல் அதிசயம்.

தன் பாடல்களுக்கு பிசாசுகளே மயங்கி விழவிட்டது. பிறிதொருப் புதுமை 'அம்மையே' என ஈசன் சொன்னது தலையாயப் புதுமை. வேள்விகளால் யாகங்களால், விளையாத பக்தியை தன் வெகுளியால் வென்றெடுத்த புனிதவதி வனிதையரின் முன்னோடி.

"கணவன் தான் வரவிடுத்த கனி இரண்டும் கைக்கொண்டு

மணமலியும் மலர்க்கூந்தல் மாதரார் வைத்ததன் பின்

பண அரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்

உணவின்மிகு வேட்கையினால் ஒருவர்மனை உட்புகுந்தார்" 4

இப்பாடலில் அம்மையாரின் துறவு வாழ்க்கையும் தெய்வீக வாழ்க்கையும்மலரப் போகிறது என்பதனை சேக்கிழார் விளக்கியுள்ளமையை அறியமுடிகிறது.

## சிவனடியாருக்குச் சீரியத்தொண்டு

'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு' (குறள். 86)

2500 ஆண்டுகளுக்கு முந்தைய வள்ளுவம் விருந்து உபசாரம் என்பது உரியவருக்கு விருந்தளிப்பது மட்டுமன்று (Thiruvalluvar, 2012). இறையடியாரையும் ஓம்புவதே விருந்து எனப் பொருள் கொள்க என்கிறது. சிறுதொண்டருக்கு பிள்ளைக்கறித் தந்ததே விருந்து என்றால், இறைவழி வந்த அடியாருக்குத் தன் பக்தி நெறியால் புனிதவதிப் படைத்ததும் விருந்துதான்.

'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோரே'

அடியவர் வாழ்வத்திலும், அவர் தம் ஆசியிலும் தான் இறைவனைக் காணமுடியும் என்பதை புனிதவதியின் வமாழ்க்கை சித்தரிக்கிறது.

"வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் - நிலைகண்டு

நாதன் தன் அடியாரைப் பசிதீர்ப்பேன்” என நண்ணி

பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம் வைத்து

ஏதம்நீர் நல்விருந்தா இன்னடிசில் - உட்டுவார்” (கா.அ. புராணம். 1734)

பிரம்மம் என்பது உணர்வென்றால், பிண்டம் என்பது நமது உடல், காரைக்காலம்மையார் பிரம்மமாகப் படைத்தது அறுசுவை விருந்து என்பதை விட அருள் வளர்க்கும் ஞானம் என்பதே பொருந்தும் (Arunachalam, 2002).

## ஒப்பியல் நோக்கில் காரைக்காலம்மையார்

அறுபத்து மூவரில் ஒரு புனிதவதி எனில் பன்னிருவரில் ஒரு ஆண்டாள் அருளியது நாச்சியார் திருமொழி என்றால், அம்மையார் மொழிந்தது அருள் பெருகும் சிவமொழி. ஏழாம் நூற்றாண்டில் அம்மையார் ஈசனை அணுகியது புத்திரமார்க்கம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆண்டாள் ஒரு படி மேலே போயி சகமார்க்கம் பேசினார். ஆண்டாள் நோன்பை எழுதி வைத்தார். அம்மையார் ஈசனுக்காய் தன் வாழ்க்கையையே நோன்பாக்கினார்.

“கற்பூரம் நாறுமோ கமலப்பூதான் நாறுமோ”

என திருமாலின் திருமேனியை ஆண்டாள் வியப்பது புதுமைதான்.

“மெய்தான் அரும்பி விதிர்விதித்து

உன்விரையார்க் கழற்க்கென் - கைதான்

நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளேன்”

என மாணிக்கவாசகர் பாடியது காரைக்காலம்மையாரை நினைவுறுத்துகிறது. அவர் மேற்கொண்டது இறைவாழ்வு அது ஒரு தவவாழ்வு.

“அம்மையே அப்பாஒப்பிலா மணியே” என சிவனடியார் பாடியது அம்மை, அப்பனைத் தான் என்றாலும் அம்மை அப்பனுக்கு அம்மையானது புனிதவதியைத் தவிர வேறு எவர் ஒப்பீட்டில் இவ்வாறு காணும்போது அலங்காரப் பிரியனாம் ஈசன் பால் கொண்ட புனிவதியின் பாசம் பெரிதெனக் கொள்கிறேன்.

காரைக்காலம்மையார் குறித்த இந்த கட்டுரையின் வழி நான் சொல்ல வருவது பக்தி என்பது ஏதோ ஒரு சிறிய இடைவெளியை உருவாக்குகிறதோ எனத் தோன்றுமிடத்து மாசம் இறைவனைக் காட்டுகிறது என்பது மெய்யாகும். இறைவனைக் காட்டுகிறது என்பது மெய்யாகும். இறைவனைப் பாடுவதில் இவ்விருவரும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

## முடிவுரை

உலகத்தின் கருப்பொருள் ஈசன் இக்கருப்பொருளைச் சுற்றி நகரும் கதாப்பாத்திரங்கள் மானிடங்கள். மானிடங்களிலும் ஒரு படி மேலானோர் ஞானிகள். இந்த ஞானிகள் தான் இறை அடியார்கள். இந்த இறையடியார்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை நீக்குவதற்கு இவர்கள் பாடுபட்டனர். அந்த இறையடியவர்களில் புனிதவதியும் ஒருவர். உடலின் வலிமையை விட உள்ளத்தின் தூய்மை வென்று காட்டும் என்ற இறைக்கொள்கை, புனிதவதியாரின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து காலந்தோறும் காரைக்காலம்மையார் கட்டுரை உருபெற காரணமாகிறது. இந்நூற்றாண்டிலும் ஞானிகள் இருக்கலாம். உள்ளத் தூய்மையில் பெண்கள் சிறந்தோர் எனில் அவர் யாவரும் புனிதவதிகளே.

## References

Arunachalam, P., (2002) Bhakti Literature, Mullai Publishing House, Chennai, India.

Mayilvahanan, C., (2003) Periyapuranam Social View, Meiyappan Publishing House, Chidambaram, India.

Sekkizhar, (1902) Periya Puranam, Kalaka veliyedu, Chennai, India.

Thiruvalluvar, (2012) Thirukkural, Sri Indu Publications, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License